**<u>சாட்சியின் வாக்குமூலம்</u>**

**<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**

**<u>அசல் வழக்கு எண்</u> : 98/2012**

**DW1 – திரு. ஹரிதாஸ், த/பெ. வேணு**

**09.01.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**<u>நேரம் 13.00 மணி</u>**

நான் வழக்கறிஞர் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் 4வது பிரதிவாதி ஆவேன். முதல் பிரதிவாதி சரோஜா என் தாயார் ஆவார். அவர் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். இரண்டாவது பிரதிவாதி ஆசிர்வாதம் என்னுடைய அண்ணன் ஆவார். 3ம் பிரதிவாதி என் உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். பிரதிவாதிகள் 5 முதல் 7 வரையுள்ளவர்கள் என் சித்தப்பாவின் மகன்கள் ஆவார்கள். 8ம் பிரதிவாதி விக்னேஷ், 3ம் பிரதிவாதியின் மகன் ஆவார். இந்த வழக்கின் முதல் வாதி கிருஷ்ணவேணி என்ற மல்லிகா யார் என்றால் என் அப்பாவின் முதல் மனைவியின் மகள் ஆவார் மற்றும் இரண்டாவது வாதி, முதல் வாதியின் சகோதரி ஆவார். வேணுவின் வாரிசுகளில் நான் தான் கடைசி மகன் என்றால் சரிதான். என் அப்பா இறக்கும்போது என் வயது என்ன என்றால் 12 வயதிருக்கும். இந்த வழக்கில் என் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள், நான் அந்த காலக்கட்டத்தில் மைனராக இருந்ததால் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சில விவரங்கள் தெரியும். என் சகோதரி ஏசம்மாள் உயிருடன் இருக்கும்போது என்னுடன் பேச்சுவார்த்தையில் இருந்தாரா என்றால் இருந்தார். அவருடைய மகன் 8ம் பிரதிவாதிக்கும் எனக்கும் எந்த மனக்கசப்பும் இல்லை என்றால் சரிதான். ஒரு பாகப்பிரிவினை பத்திரம் வாதிகளை தவிர்த்து பிரதிவாதிகளுக்குள் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் எதுவும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்காக 2ம் பிரதிவாதி கார்டியனாக இருந்து

கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்குச்சொத்துக்கள் எனக்கு தெரியாது என்றால் சில விவரங்கள் தெரியும். வழக்கு அட்டவணை சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் அல்ல என்று என் நிரூபண வாக்குமூலத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.5 ஆவணத்தில் 2வது பக்கத்தில் 3வது பத்தியில் கூட்டுக்குடும்ப சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் இதற்கு முன்பாக வாய்மொழியாக எங்களுக்குள் அல்லது என் சித்தப்பாக்குள் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று வாசகங்கள் உள்ளதா என்றால் ஆவணத்தில் இல்லை. வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்யப்பட்டு, 10 வருடங்களாக நானும் என் சித்தப்பா மகன்களும் அனுபவத்தில் இருந்தோம். என் தந்தை இறந்தபிறகு சட்ட ரீதியாக பாகப்பிரிவினை செய்தோம். என் தந்தை எப்போது இறந்தார் என்றால் 13.02.2001 அன்று இறந்தார். பாகப்பிரிவினை 05.05.2006 அன்று ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 10 வருடம் அனுபவத்தில் நான் இருந்தேன் என்று சொல்வது, நான் மைனராக இருப்பதால் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தில் என்னுடன் பிறந்த சகோதரி 3ம் பிரதிவாதியை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்து கூட்டுக்குடும்ப சொத்து என்று கூறி இரண்டு வாதிகளையும் பாகப்பிரிவினை பத்திரத்தில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 2001ம் வருடம் என் தந்தை உயில் சாசனம் மூலமாக அமுதா மற்றும் மல்லிகா முதல் மற்றும் 2ம் வாதிகளுக்கு அவர்களுக்கு கொடுக்கவேண்டிய பாகத்தை கொடுத்துவிட்டார். அதன்பிறகு 2006ம் வருடம் எங்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்பட்டது. பி.வா.த.சா.ஆ.1 உயில் சாசனம் என்றால் சரிதான்.

<u>நேரம் 13.15 மணி</u>

<u>உணவு வேளைக்கு பிறகு நீதிமன்ற பணிகளுக்கு பின் மீண்டும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி. நேரம் 15.40 மணி</u>

பி.வா.த.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் வாதிகளின் பாகத்திற்காக இந்த சொத்தை கொடுக்கிறேன் என்று குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. இந்த உயில் சாசனத்தில் என்னுடைய சுய வருமானத்தில் வாங்கிய சொத்து என்று என் தந்தை எழுதியிருக்கிறார் என்றால் சரிதான்.

அட்டவணை சொத்துக்கள் அனைத்தும் என் அப்பா மற்றும் சித்தப்பாவின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.5 ஆவணத்தில் சொத்து இந்து கூட்டுக்குடும்ப சொத்து என்று உள்ளது என்றால் சரிதான். ஆனால், சொத்துக்கள் அனைத்தும் என் அப்பா மற்றும் சித்தப்பாவின் சுய சம்பாத்திய சொத்துக்கள் ஆகும். உயில் பத்திரத்தில் என் சகோதரர் ஆசிர்வாதம் ஒரு சாட்சியாக கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். உயில் சாசனத்தில் உள்ள சங்கதிகள் இரண்டாம் பிரதிவாதிக்கு தெரிந்தும் உயிலை அவர் முழுமையாக ஏற்றுக்கொண்டு சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்றால் அது என் அப்பாவின் சம்மதத்தின்பேரில் எழுதப்பட்ட உயில் ஆகும். என் அண்ணனுக்கு உயிலை குறித்து மாற்று கருத்து இல்லை என்றால் சரிதான். உயிலை நீக்க சொல்லி நானோ அல்லது என் அண்ணனோ வழக்கு தொடுத்துள்ளோமா என்றால் இல்லை. பி.வா.த.சா.ஆ.3, 4, 7 மற்றும் 8 ஆகிய ஆவணங்கள் எல்லாம் உயிலில் கண்ட சொத்துக்களை விற்ற கிரைய பத்திரங்கள் என்றால் சரிதான். மேற்படி உயிலில் கண்ட சொத்தின் 38 செண்ட் நிலத்தில் ஒரு பகுதி 5வது பிரதிவாதியிடம் உள்ளது என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை பத்திரத்தில் வாதிகளுக்கு உயில் மூலமாக என் தந்தை ஒரு சொத்தை அவர்கள் பாகமாக கொடுத்துவிட்டார் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி.வா.த.சா.ஆ.5 ஆவணத்தில் வாதிகள் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளார்களா என்றால் இல்லை. பாகப்பிரிவினை பத்திரத்தில் வாதிகளை சேர்த்துள்ளோமா என்றால் இல்லை. 2006ம் வருடத்தில் பாகப்பரிவினை செய்தோம், முதல் வாதி கிருஷ்ணவேணி என்ற மல்லிகா மற்றும் இரண்டாவது வாதி அமுதாவின் கணவர்கள் தான் முன்நின்று பிரித்து கொடுத்தார்கள். மேற்படி விவரத்தை என் எதிர்உரையிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ கூறியுள்ளேனா என்றால் இல்லை. வேண்டுமென்றே வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் ஊரில் என் தந்தையார் கோவிந்தராஜுலு என்பவரால் சண்டையின்போது தாக்கப்பட்டார் என்றால் சரிதான். சிறிது நாட்களில் என் தந்தையை தாக்கிய கோவிந்தராஜுலுவை யாரோ கொலை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு சமயத்தில் எங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் ஊரில் இருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது என்றால் சரிதான். என் தந்தையார் அவர்கள் வீட்டில் அடைக்கலம் இருந்து வழக்கு செலவுகள் அனைத்தும் பார்த்துக்கொண்டதால்

தான் அதற்கு இணையாக வழக்கு சொத்தை வாதிகளுக்கு உயில் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. சொத்துக்களை விற்று தான் என் தந்தை வழக்கை நடத்தினார். (மேற்படி கேள்விக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்). பாகப்பிரிவினை பிரதிவாதிகள் எங்களுக்கும் வேணுவின் இரண்டாவது மனைவியின் வாரிசுகளுக்கும் அவரது தம்பி வாரிசுகளுக்கும் சேர்த்து போட்டுள்ளோம் என்றால் சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும் பாகப்பிரிவினையில் பிரதிவாதிகள் 1, 2 மற்றும் 4 ஆகியவர்களுக்கு அதிகப்படியான பங்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும் என் சித்தப்பாவின் வாரிசுகள் 5 முதல் 7 நபர்களுக்கு குறைவான பங்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சரிபாகமாக தான் ஒதுக்கப்பட்டுள்ளது, அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். என் சித்தப்பாவின் மகன்கள் வாதிகளை விட்டுவிட்டு பாகப்பிரிவினை செய்வது தவறு என்றும் ஆகவே, சொத்தில் அதிகப்படியான பாகத்தை எங்களுக்கு கொடுத்துவிட்டு குறைவான பாகத்தை அவர்கள் எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு தெரியாமல் வாதிகள் மற்றும் 3வது பிரதிவாதியை சேர்க்காமல் ஏற்படுத்திய பாகப்பிரிவினை பத்திரம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதிகளையும் 3வது பிரதிவாதியையும் சேர்க்காததால் முறையான பாகப்பிரிவினை நடக்கவில்லை, பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை பத்திரம் சட்டப்படியும் இந்து வாரிசுரிமை சட்டப்படியும் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதிகள் என் தந்தையின் மீது அபாண்டமாக பழி சமத்துகிறார்கள் என்று என் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன், அபாண்டமான பழி என்ன என்றால் முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே என் அம்மாவுடன் தவறான தொடர்பில் இருந்ததாக கூறியுள்ளார்கள். ஆனால், என் அப்பா, முதல் மனைவி அவருடன் வாழ விருப்பம் இல்லாமல் முதல் மனைவி வேறு ஒருவருடன் திருமணம் செய்தபிறகு தான் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் என் தாயாரை திருமணம் செய்துக்கொண்டார். என் தந்தையார் விற்ற சொத்தில் எதிலாவது தான் முதல் மனைவியை விவாகரத்து செய்ததாகவோ பஞ்சாயத்தார் முன்னிலையில் என் தாயாரை திருமணம் செய்ததாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. என் தந்தையாரின் முதல் மனைவியை அவர் விவாகரத்து செய்ததாக நீதிமன்ற உத்தரவு தாக்கல் செய்துள்ளேனா என்றால்

இல்லை. என் அம்மா என் தந்தையை இரண்டாவதாக திருமணம் செய்துள்ளார், முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது முறையாக விவாகரத்து செய்யாமல் திருமணம் செய்ததால் என் தாயார் இரண்டாவது மனைவி என்ற ஸ்தானத்தை பெறமுடியாது என்றால் சரியல்ல. அதனால் வேணுவின் கூட்டுக்குடும்ப சொத்தில் என் தாயாருக்கு எந்த சொத்தும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என் தாயார் வாதிகளை பார்த்துக்கொண்டார் என்று கூறியுள்ளேன், முதல் வாதிக்கு திருமணமாகும்போது என் அண்ணன் ஆசிர்வாதம் 3 மாத குழந்தை என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. என் அண்ணன் ஆசிர்வாதம் என் தந்தையும் தாயும் சேர்ந்து வாழ ஆரம்பித்து ஒரு வருடத்தில் பிறந்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் தாயார் வந்து தான் வாதிகளை வளர்த்தார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. முதல் வாதிக்கு 7 வயது மற்றும் இரண்டாவது வாதிக்கு 4 வயது இருக்கும்போதே அவர்கள் தாயார் அவர்களை விட்டு சென்றுவிட்டார். 7 வயது மற்றம் 4 வயது குழந்தைகளை வேணு அன்பாக பார்த்துக்கொண்டார், அதனால் அவருக்கு பெண் குழந்தைகள் மீது மிகுந்த அன்பு என்றால் சரியல்ல. என் தாயார் மிக குறுகிய காலம் வாதிகள் ஆகியோருடன் இருந்தாலும் மாற்றான்தாய் மனப்பான்மையுடன் தான் அவர்களை நடத்தினார் என்றால் சரியல்ல. முதல் வாதியின் திருமணத்தின்போது அவருக்கு கொடுக்க இருந்த சீர்வரிசை பணத்தை எடுத்துக்கொண்டு என் தாயார் சென்றுவிட்டார் என்றாலும் அதை திரும்ப பெற சில காலம் ஆனது என்றால் சரியல்ல.

நேரம் 16.25 மணி

**( வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.